**கொழும்புப் பல்கலைகழகம் - இலங்கை**

**கலைப்பீடம்**

நான்காம் வருட கலைமாணிப் பரீட்சை, பருவம் - I – 2021/2022

PSC 4171 – இலங்கையின் பொதுக் கொள்கை மற்றும் பொதுத்துறை நிர்வாகம்

நேரம்: **இரண்டு (02)** மணித்தியாலங்கள்

ஏதேனும் **மூன்று (03)** வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக

ஒவ்வொரு விடைக்கும் தலா **இருபது (20)** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

---

1. 1980கள் தொடக்கம் இலங்கையின் அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டு உலகமயமாக்கல் செயன்முறையானது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் சந்தை முறைமையின் அடிப்படைக் கட்டமைப்பில் எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என்பதை விளக்குக.

2. அ) கட்டமைப்பு சீராக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் (SAP) அடிப்படை அம்சங்களை அடையாளப்படுத்துக.

   ஆ) இலங்கைக்கு தமது நிதி அனுசரணைகளை நல்குவதற்கு பிறிட்டன்வூட் (Bretton Woods) நிறுவனங்கள் (சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி) மிக அண்மைக்காலமாக கோருகின்ற முன்நிபந்தனைகளை விளக்குக.

3. இனத்துவ சிறுபான்மையினரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இலங்கையில் கடந்த காலங்களில் அதிகாரப் பகிர்வுக்காக மேற்கொள்ளப்பட்ட பின்வரும் ஏற்பாடுகளைப் பரீட்சிக்குக:

   அ) 1980 இன் மாவட்ட அபிவிருத்தி சபைகள் (DDC)

   ஆ) 1987 இன் மாகாண சபைகள் (PC)

4. இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் பொதுக் கொள்கைகள் தென் பகுதி சிங்கள இளைஞர்களின் அரசியல் மற்றும் பொருளாதார அபிலாஷைகளை நிறைவுசெய்யவில்லை என நீர் எண்ணுகிறீரா? உமது விடையினை 1971 மற்றும் 1988-89 ஜே.வி.பி கிளர்ச்சிகளின் அனுபவங்களுடன் விளக்குக.

5. "சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் இலங்கை அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட பாரபட்சமான கொள்கைகள் நாட்டின் வட-கிழக்கு பிரதேசங்களில் தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களை ஏந்தி ஒரு தனி அரசை உருவாக்குவதற்காகப் போராடுவதற்கு வழிவகுத்தது." இக் கூற்றினை நாட்டில் தசாப்த காலமாக நீடித்த சிவில் யுத்தத்தின் அடையாளப்படுத்தப்பட்ட மூல காரணிகளை பொருத்தமான உதாரணங்களுடன் கலந்துரையாடுக.

6. பின்வருவனவற்றில் ஏதேனும் <u>**இரண்டிற்கு (02)**</u> சிறுகுறிப்பு எழுதுக:

அ) 1972 இல் பொதுத்துறை நிர்வாகத்தின் மீதான அரசியல் கட்டுப்பாடு

ஆ) 1978 இன் திறந்த பொருளாதாரக் கொள்கையின் பிரதான தாக்கங்கள்

இ) பொருளாதார நெருக்கடிகள் காரணமாக 2022 இன் மக்களின் போராட்டம்

ஈ) இலங்கையில் தனியார்மயமாக்கல் செயன்முறையும் நலன்புரி அரசின் வீழ்ச்சியும்

*****************